# நெகேமியாவின் ஜெபம்

Pr. K.Joseph

பாபிலோனில் சிறைபிடிக்கப்பட்டுப் போய் அகதிகளாக இஸ்ரவேல் மக்கள் வாழ்ந்தபோது நெகேமியா என்பவர் ராஜாவின் அரண்மனையில் வேலைக்காரனாக ராஜாவுக்கு திராட்சை இரசம் ஊற்றிக்கொடுக்கிற வேலையில் இருந்துகொண்டிருக்கிறார். பாபிலோனில் இருந்தபோதும் தன்னுடைய சொந்த தேசத்து மக்களைக் குறித்தும் எருசலேமைக் குறித்தும் பாரம் அவருக்குள் இருந்துகொண்டே இருக்கிறது. அந்த பாரத்தை பின்வரும் வசனத்தில் நாம் பார்க்கிறோம்.

நெகேமியா–1: 2ல் *என் சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள், அவர்களிடத்தில் நான் சிறையிருப்பில் மீந்து தப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தேன்.*

**நெகேமியாவை ஜெபிக்க வைத்த செய்தி:** (நெகே–1: 3)
*அதற்கு அவர்கள்: சிறையிருப்பில்* ***மீந்திருக்கிறவர்கள்*** *அந்தத் தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள், எருசலேமின்* ***அலங்கம்*** *இடிபட்டதும், அதின்* ***வாசல்கள்*** *அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்றார்கள்.*

1. மக்கள் மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறார்கள்
2. எருசலேமின் மதில் இடிபட்டுக் கிடக்கிறது
3. அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறது

**இஸ்ரவேலின் மக்கள்** தேவனுடைய மக்கள். அவர்கள் தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்ட, தேவனோடு உடன்படிக்கைக்குள் இணைக்கப்பட்ட மக்களாவார்கள். அவர்களுக்குத் தீங்கும் நிந்தையும் வருவது நெகேமியாவைப் பாரப்படுத்தியது. அவர்கள் தன் ஜனம் என்பதற்காக மாத்திரம் அல்ல, அவர்கள் தேவனுடைய மக்கள் என்பதும் அவரைப் பாரப்படுத்தியற்கு முக்கியமான குறிப்பாக இருக்கிறது.

**எருசலேமின் மதில்** என்பது பாதுகாப்புச் சுவரைக் குறிக்கிறது. மதில் இடிக்கப்பட்டிருப்பது பாதுகாப்பற்ற நிலையில் அந்த நகரம் இருப்பதால் எதிரிகள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வந்து அதை இன்னும் தாக்கி சூரையாடத்தக்க அவல நிலையில் இருந்ததைக் காட்டுகிறது.

**எருசலேமின் வாசல்கள்** என்பது மக்கள் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவதாகும் அவர்கள் எங்கும் போய்வர முடியாவதவாறு அந்த வாசல்களை எதிரிகள் சுட்டெரித்துப்போட்டிருந்தார்கள்.

**நெகேமியா–2:** 2 ராஜா நெகேமியாவைப் பார்த்து "நீ ஏன் துக்க முகமாய் நிற்கிறாய்?" என்று கேட்டபோது நெகேமியா சொன்ன பதிலைக் கவனியுங்கள். 2: 3ல் *அப்பொழுது நான் மிகவும் பயந்து, ராஜாவை நோக்கி: ராஜா என்றைக்கும் வாழ்க, என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கும்போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி? என்றேன்.*

**நகரம் பாழாய்க்கிடக்கிறது: இந்த நகரத்தின் சிறப்பு என்ன?**

1. **பிதாக்களுடைய கல்லறைகளின் நகரம்** (The City of **T**ombs)
கல்லறைகள் எதை அடையாளப்படுத்துகிறதென்றால் உயிர்த்தெழுதல் என்று ஒன்று உண்டு. பிரேதக் குழிகளில் வைக்கப்பட்ட அனைவரும் ஒரு நாள் உயிர்த்தெழுவார்கள். மரணத்தைவிட மரணத்திற்குப் பின் ஒரு உயிர்த்தெழுதல் இருக்கிறது என்பதை நமக்கு நினைப்பூட்டத்தான் கல்லறைகள் ஏற்படுத்தப்பட்டன. மரணம் நிச்சயம் சம்பவிக்கும் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் அதற்குப்பின் ஒருநாள் எல்லாருக்கும் உயிர்த்தெழுதல் உண்டு என்பது அநேகருக்குத் தெரியாது.
1கொரிந்தியர் – 15:11 *மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்?,*
1கொரி – 15: 22 *ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள்* ***எல்லாரும்*** *உயிர்ப்பிக்கப்படுவார்கள்.*
2. **சத்திய நகரம்** (The City of **T**ruth) (ஏசாயா – 1: 26 *நீ நீதிபுரம் என்றும்,* ***சத்தியநகரம்*** *என்றும் பெயர்பெறுவாய்.*) எருசலேம் சத்திய நகரம் என்று அழைக்கப்படும் என்று தேவன் சொல்லியிருக்கிறார். காரணம் அது சத்திய தேவனுடைய நகரமாக இருக்கிறது. சத்தியம் என்பது நித்தியத்திற்கும் தொடரவிருக்கிற தேுவனுடைய மாறாத பிரமாணமாக இருக்கிறது.
3. **தேவாலயத்தின் நகரம்:** (The City of **T**emple) இங்கே தான் தாவீதக்கு தேவன் தரிசனத்தை கொடுத்து அவர் கட்டநினைத்த தேவாலயத்தை சாலமோன் கட்டனார். தேவன் மனிதர் மத்தியில் தங்கும் இடமாக அவருடைய வாசஸ்தலமாக தேவாலயம் இருக்கிறது. தேவன் தங்கும் இடமாகிய இந்த தேவாலயத்தையும், அதன் நகரத்தையும் சாத்தான் எப்படியாவது அழித்துவிட வேண்டும் என்று எத்தனையோ முறை தாக்குதல்களை மேற்கொண்டுவந்திருக்கிறான். இப்பொழுதும் அதைச் செய்துகொண்டே இருக்கிறான். தேவாலயத்தை மீண்டும் கட்டுவதில் இப்பொழுதும் எருசலேமில் பிரச்சினை இருந்துகொண்டே இருக்கிறது. தேவலாயம் கட்டப்பட்ட பிறகுதான் இயேசு கிறிஸ்து மீண்டும் பூமிக்கு வருகிற செயல் நடக்கும்.
4. **சிங்காசனத்தின் நகரம்:** (The City of **T**hrone) இயேசு கிறிஸ்து மறுபடியும் இந்த பூமியனைத்திற்கும் ராஜாவாக வரும்போது எருசலேமிலே தான அவருடைய சிங்காசனம் இருக்கும். இங்கிருந்து கொண்டுதான் அவர் முழு உலகத்தையும் அரசாளப் போகிறார். முழு உலகத்திற்கும் தலைநகரமாக எருசலேம் இருக்கப்போகிறது.

A. **மதில் என்பது எதைக் குறிக்கிறது?**

நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் மதில் என்பதை நான் நம்முடைய மனதின் எண்ணங்களுக்கு ஒப்பிடுகிறேன். அனதில் பலவகைப்பட்ட எண்ணங்களின் அரண்கள் இருக்கின்றன என்று 1கொரிந்தியர் 10: 4,5 வசனங்கள் சொல்கிறது. நல்ல அரண்கள் தெய்வீகமான காரியங்களைப் பாதுகாப்பதற்குரிய மதிலைப் போல இருக்கின்றன. தீய அரண்கள் சாத்தானுக்குப் புகழிடம் கொடுக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. தேவனுக்குரியவைகள் நமக்குள் பாதுகாக்கப்படாதவாறு நல்ல எண்ணங்கள் என்ற மதிலை இடித்துப்போடுவது சாத்தானுடைய வேலையாக இருக்கிறது.

B. **வாசல் என்பது எதைக் குறிக்கிறது?**

நம்முடைய வாய் வாசலுக்குச் சமமாக இருக்கின்றது. வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளில் சாத்தான் ஆதிக்கம் பிடித்திருப்பானானால் நம்முடைய வாய் என்ற

வாசல் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது என்று பொருள்படுகிறது. நம்முடைய வாயின் வார்த்தைகள் பிறரைக் கட்டியெழுப்புகிறதா அல்லது இடித்துப்போடுகிறதா? பக்திவிருத்தியை உண்டாக்குகிறதா அல்லது பின்மாற்றத்தை உண்டாக்குகிறதா? விசுவாசத்தை வர்த்திக்கச் செய்கிறதா அல்லது மனமடிவை ஏற்படுத்துகிறதா? சமாதானத்தைக் கொடுக்கிறதா அல்லது சமாதானத்தைக் கெடுக்கிறதா?

C. **நகரம் என்பது எதைக் குறிக்கிறது?**

நம்முடைய வாழ்க்கை நிலையைக் குறிக்கிறதாக இருக்கிறது. நமது வாழ்வு சந்தோஷமானதாக, சமாதானமுள்ளதாக, ஜெயமுள்ளதாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆனால் நகரம் பாழாய்க்கிடக்கிறது என்றால் அது துக்கத்தையும் சோகத்தையும் விரக்தியையும் உண்டுபண்ணுகிறதாக இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம். இப்படிப்பட்ட நிலைமையில் நெகேமியாவின் செயல்பாடு நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது.

**நெகே–1: 4** *இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி:*

நெகே–1: 5 முதல் 11 வசனங்களில் நெகேமியாவின் ஜெபத்தை நாம் வாசிக்கிறோம்.

- தேவனை மகத்துவமும் பயங்கரமுமான தேவனாகப் பார்க்கிறார்.
- பாவங்களை அறிக்கையிட்டு ஜெபிக்கிறார்.
- தேவன் சொன்ன வார்த்தைகளைப் பயன்படுத்தி ஜெபிக்கிறார்.
- தேவனுடைய மீட்பின் செயலை முன்நிறுத்தி ஜெபிக்கிறார்.
- இரக்கம் கிடைக்கச் செய்தருளும் என்று ஜெபிக்கிறார்.